கம்பளை கல்வி வலயம்

அறிவகம்

(ஆரம்பப்பிரிவு)



மாணவர்களுக்கான கற்றல் கையேடு

தரம் - 05

www.lkedu.lk

கம்பளை வலய கொரோனா விடுமுறைகால வேலைத்திட்டம்

2021

தமிழ்மொழி

ஆலோசனை வழிகாட்டல்

திருமதி **M.** துஷ்யந்தி
(கோட்டக் கல்விப் பணிப்பாளர் - கம்பளை கல்வி வலயம்)

திரு **S.R.B.** சேவியர்
(உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப்பிரிவு) - கம்பளை கல்வி வலயம்)

திருமதி **T.** கௌசலா
(ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் - கம்பளை கல்வி வலயம்)

ஆசிரியர்கள்

திரு.**S.**அரியரட்ணம் - க/சரஸ்வதி தேசிய கல்லூரி – புசல்லாவ

திரு.**V.**ரவீந்திரகுமார் - க/இந்து ஆரம்பப் பாடசாலை – புசல்லாவ

திருமதி **S.**சசிகலா – க/கதிரேசன் மாதிரி ஆரம்பப் பாடசாலை

திருமதி.**K.**சத்தியவாணி - க/கதிரேசன் மாதிரி ஆரம்பப் பாடசாலை

திருமதி.**J.E.**ஜெனிபர் - க/கதிரேசன் மாதிரி ஆரம்பப் பாடசாலை

திருமதி.**M.**சரஸ்வதி - க/கதிரேசன் மாதிரி ஆரம்பப் பாடசாலை

திருமதி.**R.**கிஷாந்தி – க/கம்பளை இந்துக் கல்லூரி

திருமதி.**D.**செபத்ஷிலா – க/ரொத்சைல்ட் தமிழ் வித்தியாலயம்

திருமதி.**V.**கலைச்செல்வி - க/இந்து ஆரம்பப் பாடசாலை – புசல்லாவ

கணனி வடிவமைப்பு

திருமதி M.A.F. அஸ்ஹா

க/இல்லவதுர ரகுமானியா முஸ்லிம் வித்தியாலயம்

www.lkedu.lk

(01) கீழ்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

அகிலன் தரம் ஐந்தில் கல்வி கற்கும் ஒரு மாணவன். ஒரு நாள் இரவு வேளை அவனது கிராமத்தில் திடீரென மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது.அதனால் அகிலன், அம்மா,அப்பா,தாத்தா,பாட்டி,அண்ணா,தங்கை ஆகியோர் வீட்டு முற்றத்தில் வந்து அமர்ந்தார்கள்.

1. எவ்வேளை மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது?

.....

2. அகிலனின் குடும்பத்தார் ஏன் வீட்டு முற்றத்தில் வந்து அமர்ந்தனர்?

.....

3. காலப் பெயர்சொல் ஒன்றை எழுதுக.

.....

4. நகரத்தில் என்பதன் எதிர்கருத்துச் சொல்?

.....

5. பந்தியில் எத்தனை எதிர்பாற் சொற் சோடிகள் உள்ளன?

.....

6. உயர்திணை பன்மை இறந்த கால வினைச் சொல்லை எழுதுக.

.....

(02) கீழ்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

அன்று தொலைநோக்குப் பார்வையுடன் அசோக சக்கரவர்த்தி வீதியோரங்களில் மரக்கன்றுகளை நட்டார். அதனால் மழை பொழிந்தது. விவசாயம் செழித்தது.மக்கள் வளமுடன் வாழ்ந்தனர்" என்றது மான்.

www.lkedu.lk

1. தொலைநோக்குப் பார்வையுடன் வீதியோரங்களில் மரக்கன்றுகளை நட்டவர் யார்?

.....

2. வீதியோரங்களில் எனும் சொல்லை பிரித்தெழுதுக.

.....

3. மாந்தர் எனும் சொல்லின் ஒத்தகருத்து சொல்லை எழுதுக.

.....

4. மழை பொழிந்ததால் யாது நிகழ்ந்தது?

.....

5. ஆண்மரபுப் பெயர் "கலை"யுடன் தொடர்புபட்ட சொல் யாது?

.....

6. உயர்திணை ஒருமை வினைச்சொல் ஒன்றை எழுதுக.

.....

7. உயர்திணை பன்மை பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக.

.....

8. உயர்திணை பன்மை வினைச்சொல் ஒன்றை எழுதுக.

.....

(03) பந்தியை வாசித்து விடை தருக

வாசிப்பதன் மூலமாகத்தான் பல தகவல்களை அறிந்து கொள்கின்றேன். நீங்களும் நிறைய நூல்களை வாசித்தால் பல தகவல்களைத் தெரிந்து கொள்ளலாம். எங்கள் வகுப்பாசிரியரும் அவ்வாறுதான் கூறினார். நாங்களும் நூலகத்திற்குச் சென்று நிறைய நூல்களை வாசிக்கின்றோம். ஆனால் வாசித்து முடிந்ததும் மறந்து விடுகிறோமே!

www.lkedu.lk

1. எதன் மூலம் பல தகவல்களை அறிந்து கொள்கின்றோம்?

.....

2. நூல்கள் பல காணப்படும் இடம் எது?

.....

3. செய்தி என்பதன் ஒத்த பதம் எது?

.....

4. வகுப்பாசிரியர் என்பதனை பிரித்தெழுதுக?

.....

5. ஞாபகம் என்பதன் எதிர்ப் பதம் எது?

.....

6. தன்மை, பன்மை, உயர்திணை சொல் ஒன்று தருக?

.....

(04) பந்தியை வாசித்து விடை தருக.

"நான் என்ன குறைந்தவனா? என்னிலும் கல்சியமுண்டு, இரும்புச்சத்துண்டு, விற்றமின் சீ உண்டு. பழரசமாகப் பருகுவதற்கு இன்று எல்லோருக்கும் ஏற்றவனாகி விட்டேன். மக்கள் மட்டுமல்ல யானைகளும் என்னை விரும்பி உண்ணும்" என்றது விளாம்பழம்.

1. யானை விரும்பி உண்ணும் பழம் எது?

.....

2. விளாம்பழத்தில் காணப்படும் சத்துக்கள் எவை?

.....

3. இப்பந்தியில் காணப்படும் நிறுத்தற் குறிகளைப் பெயரிடுக?

.....

www.lkedu.lk

4. பழங்களைக் கொண்டு ஆக்கப்படும் ஒரு பானம் எது?

.....

5. உயர்திணை, பன்மை, படர்க்கை, பெயர்ச்சொல் ஒன்றினைகத் தருக?

.....

(05) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

மீன் தொட்டியின் அழகை இரசியுங்கள். வண்ண வண்ண மீன்கள் சுறுசுறுப்பாக நீந்துவதைப் பாருங்கள். அவை ஒன்றையொன்று துரத்திச் செல்வது அழகோ அழகு அதைப் பார்க்கும் போது எமது மனதிற்கு அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

1. பந்தியில் வந்துள்ள அ.ஃறிணை பன்மைச் சொல் யாது?

.....

2. சோம்பலாக என்பதன் எதிர்க்கருத்துச் சொல் யாது?

.....

3. பந்தியில் வந்துள்ள அடுக்குத் தொடர் யாது?

.....

4. சாந்தமும் என்பதற்கு பந்தியில் வந்துள்ள ஒத்த கருத்துச் யாது?

.....

5. பந்தியில் வந்துள்ள தன்மை பன்மைச் சொல் யாது?

.....

6. இப்பந்தியில் ஓர் இடத்தில் நிறுத்தற்குறி இடப்படவில்லை. அவ்விடத்தில் இடப்பட வேண்டிய நிறுத்தற்குறி யாது?

.....

www.lkedu.lk

(06) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

மின்குமிழைக் கண்டுபிடித்து இரவை ஒளியால் நிரப்பிய அந்த அற்புத மனிதர் தோமஸ் அல்வா எடிசன் ஆவார் இவர் தாயார் வழங்கிய தன்னம்பிக்கையான 'உன்னால் முடியும்' என்னும் கூற்றை உண்மையாக்கிக் காட்டியவர். வாசிப்பிலும் சுய கற்றலிலும் ஆர்வமுடையவரை ஒரு விஞ்ஞானியாக உருவாக்கிய பெருமை அந்த தாயாரையே சாரும்.

1. மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்?

.....

2. எடிசனின் தாயார் அவருக்கு எதனை வழங்கினார்?

.....

3. எடிசன் எவற்றில் ஆர்வம் உள்ளவராக இருந்தார்?

.....

4. இருபால் பொதுப்பால் பெயர்ச்சொல் ஒன்று தருக.

.....

5. உயர்திணை, பெண்பால், ஒருமை பெயர்ச் சொல் ஒன்று எழுதுக.

.....

www.lkedu.lk

(07) கீழ்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

கொரனோ நோய் என்பது மனிதர்களுக்கு சளி, இருமல். காய்ச்சல், மற்றும் மூச்சுத்திணறல் ஆகியவற்றை ஏற்படுத்தும் ஒருவகை வைரஸ் கிருமியாகும். இது விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு பரவியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இந்த நோயின் அறிகுறிகள் காய்ச்சல், சளி, இருமல். உடல் சோர்வு மற்றும் ஒருவகை மூச்சுத்திணறல் என்பன ஏற்படும். இந்நோயின் அறிகுறிகளைக் கண்டவுடன் சுயமாக தனிமைப்படுத்திக்கொண்டு வைத்தியரை நாடவேண்டும்.

இந்நோய் ஆசியாவில் சீனாவின் வூஹான் மாநிலத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இன்று உலக நாடுகளையே அச்சுறுத்திக்கொண்டு மக்களின் இயல்பான வாழ்க்கையை நிலைக்குலையச் செய்துவிட்டது. இரண்டாயிரத்து இருபதில் உலக பொது சுகாதார அமைப்பு இதனை ஒரு பெருந்தொற்றாக அறிவித்தது. இந்நோயிலிருந்து எம்மை பாதுகாப்பதற்கு முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், சவர்க்காரம் கொண்டு கைகளை அடிக்கடி சுத்தம் செய்தல், தும்மல், இருமல் வரும்போது கைக்குட்டைகளைப் பாவித்தல், பொது இடங்களுக்குச் செல்லாது இருத்தல் போன்ற நடைமுறைகளை பேணுமாறு பல சுகாதார அமைப்புகள் வலியுறுத்துகின்றன.

1 இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பெருந்தொற்று எது?

.....

2 இந்நோய் எங்கு முதன்முதலில் கண்டுப்பிடிக்கப்பட்டது?

.....

3 இந்நோய்க்கான அறிகுறிகள் எவை?

.....

4 இந்நோயினை பெருந்தொற்று என அறிவித்த நிறுவனம் எது?

.....

5 இப்பந்தியிலுள்ள இணைமொழி ஒன்று தருக?

.....

6 பிணி என்பதற்கு ஒத்த கருத்துச்சொல் தருக

.....

www.lkedu.lk

7 இந்நோய் தொடர்பாக சுகாதார அமைப்புகள் வெளியிட்ட அறிவித்தல் ஒன்று தருக?

.....

8 இப்பந்தியிலுள்ள உயர்திணை படர்க்கை பன்மை பெயர்ச்சொல் ஒன்று தருக?

.....

9 இப்பந்தியிலுள்ள இடப்பெயர் ஒன்று தருக?

.....

10 இப்பெருந் தொற்றிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் எவை?

.....

.....

.....

.....

(08) கீழ்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

சுத்தமான புத்தம்புதிய தரமான காய்கறிகள் பழவகைகள், மலர் வகைகளை நாம் பெறக்கூடிய மிக நம்பகரமான இடம் வீட்டுத்தோட்டமாகும். அழகை அதிகரிப்பதற்கும் உடலுக்கு தேவையான தரமான உணவையும் போசணைகளையும் பெறுவதற்கும் பொருளாதார நன்மை பெறுவதற்கும் வீட்டுத்தோட்டத்தைப் பயன்படுத்துவதற்கான ஆர்வத்தை ஊட்டுவதும் பரிச்சயத்தை ஏற்படுத்துவதும் அவசியமாகும்.

ஆதிக இடவசதியுள்ள இடங்களை நன்கு பயன்படுத்தியும் இடவசதி குறைவான இடங்களில் பொருத்தமான உத்திகளைக் கையாண்டு திட்டமிட்டும் பயன்படுத்துவதற்கான திறனை விருத்திசெய்வது அவசியமாகும். உடலுக்கு தீங்கு விளைவிக்காத பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மற்றும் பயிர் வளர்ப்பு முறைகளை இனங்காண்பதும் பயனுள்ளவற்றை உற்பத்தி செய்து நுகர்வதன் மூலம் தன்மதிப்பு உணர்வுடன் களிப்புறுவதற்கும் ஆர்வமுள்ளோரை உருவாக்குவது அவசியமாகும்.

www.ikeau.lk

1. இப்பந்திக்கு பொறுத்தமான தலைப்பு ஒன்று தருக?

.....

2 நுட்பங்கள் என்பதன் கருத்து என்ன?

.....

3 விவசாயத்துடன் இணைந்த பண்பாட்டு பெறுமானங்களில் ஒன்று தருக?

.....

4 வீட்டுத்தோட்ட செய்கையின் நன்மைகள் இரண்டு தருக?

.....

5 இப்பந்தியிலுள்ள இணைமொழி ஒன்று தருக?

.....

6 எச்செயல்களையும் செய்யுமுன் அது தொடர்பான வரையறைகளை மேற்கொள்ளும் நடவடிக்கையை எவ்வாறு அழைப்பர்?

.....

7 மகிழ்ச்சி என்பதற்கு ஒத்த கருத்து சொல் ஒன்று தருக?

.....

8 இப்பந்தியிலுள்ள உயர்திணை தன்மை பன்மை பெயர்ச்சொல் ஒன்று தருக?

.....

(09) பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

எள்ளினும் சிறிய எறும்பைப் பார்! - அது
எதையும் இழுத்துச் செல்வதைப் பார்!
உள்ளம் கொண்ட ஊக்கத்தால் - அது
உன்னையும் கூட இழுத்துவிடும்!
புல்லும் வெளியே தலை நீட்ட - இப்
பூமியைத் துளைத்து வழி காணும்!
கல்லும் அதனால் இடம்பெயரும்! - அதன்
காரணம் ஊக்கம் உழைப்பாகும்!

www.lkedu.lk

1. கல்லும் இடம் பெயரக் காரணம் யாது?

.....

2. இப்பாடல் மூலம் நீங்கள் பெற்றுக் கொள்ளும் படிப்பினை யாது?

.....

3. பாடலில் வந்துள்ள தானியம் எது.?

.....

4. இங்கு வந்துள்ள இடப்பெயர் ஒன்று தருக?

.....

5. பார் என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது?

.....

6. "உழைப்பபாகும்" என்பதை பிரித்து எழுதுக

.....

(10) பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

நஞ்சைக் கக்கும் நாகப் பாம்பு
நடிக்கும் மயிலைப் பார்க்குது
அஞ்சிப் புற்றில் ஒளிந்தி டாமல்
அருகில் நின்று பார்க்குது
கொல்லும் வேடன் வில்லும் நழுவக்
கூத்தைப் பார்த்துக் களிக்கிறான்
குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு
குதித்துக் குதித்து நடிக்கிறான்

1. வேடனிடம் காணப்படும் கூரிய ஆயுதம் ஒன்று தருக.

.....

2. குறவன் என்ற சொல்லின் எதிர்பால் சொல் யாது?

.....

3. பாம்பின் வாழிடம் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

www.ikedu.lk

4. உயர்திணை பெண்பால் வினைச் சொல் ஒன்று தருக.

.....

5. "நடிக்கிறாள் " என்ற சொல்லில் வந்துள்ள உயிர்க்குறிகள் எவை?

.....

6. சேய்மை என்பதன் ஒத்த சொல்?

.....

(11) தரப்பட்டுள்ள பந்தியின் உதவியுடன் வினாக்களுக்கு விடை தருக.

இயற்கையான வளங்களை மனிதன் அழிப்பதனால் எதிர்கால சந்ததியினரின் மிக மகிழ்ச்சிகரமான வாழ்வு கேள்விக்குறியாகிறது. குறிப்பாக காடுகளை அழிப்பதால் எமது சூழல் பாரிய மாற்றங்களுக்குள்ளாகிறது. காடுகளை அழிப்பதால் மழைவீழ்ச்சி குன்றுவதோடு வெப்பம் அதிகரிக்கின்றது. பறவையினங்களும், விலங்குகளும் வாழ்விடம் இன்றியும் உணவின்றியும் அழிவடையக்கூடிய அபாயம் ஏற்படுகிறது. மனிதனின் பல்வேறு தேவைகளுக்கும் இன்று உலகின் மூலை முடுக்கு எங்கும் இயற்கைக் காடுகள் அழிக்கப்படுகிறது. இதனால் பூமியில் பாலைவனங்களின் அளவு அதிகரிக்க வாய்ப்பேற்படுகிறது. இந்நிலமை தொடருமேயானால் நாம் வாழும் இவ்வுலகம் மெல்ல மெல்ல உயிரினங்கள் வாழமுடியாத தன்மையாகி விடும்.

1. மழைவீழ்ச்சி குன்றக் காரணம் யாது?

.....

2. பந்தியில் உள்ள இணைமொழிச் சொல் ஒன்றை எழுதுக?

.....

3. வெப்பமும் மணலும் உடைய மணற்பிரதேசத்தை குறிக்கும் சொல்லை பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக?

.....

www.ikaddi.lk

4. பந்தியில் உள்ள அடுக்குத்தொடர் ஒன்றை எழுதுக?

.....

5. பறவையினங்களும் என்பதை பிரித்தெழுதுக?

.....

6. பந்தியில் உள்ள அடைமொழிச் சொல்லை எழுதுக?

.....

7. உயர்திணை, பெயர்சொல் ஒன்றை எழுதுக?

.....

8. "பெரிய" என்பதால் கருதப்படுவது யாது?

.....

9. பந்தியில் கூறப்பட்ட இயற்கை வளம் எது?

.....

(12) தரப்பட்டுள்ள பந்தியின் உதவியுடன் வினாக்களுக்கு விடை தருக

நம் சூழல் மிகவும் அழகான இயற்கை காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற மலைத் தொடர்கள். இன்னிசைக் கீதம் இசைத்தபடி பாய்ந்து வரும் அருவி நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள் அவற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள் அக்காட்சிகளைப் பார்த்து கனிகளை உண்டு நான் உல்லாசமாக பறந்து கொண்டிருப்பேன்

01. இங்கு கீதம் இசைத்து வருவது யாது?

.....

02. "செயற்கை" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை தருக?

.....

03. "பழங்கள்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை தருக?

.....

www.ikedu.lk

04. "மரம்" என்ற சொல்லின் பன்மைச் சொல்லை தருக?

.....

05. இங்கு இடம்பெற்றுள்ள உவமானத்தை எழுதுக?

.....

06. மேற்குறித்த விபரம் எத்தகைய இடம் பற்றியது?

.....

(13) கீழ்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

புல்வெளிக்கு அப்பால் ஓர் அடர்ந்த காடு இருந்தது. காட்டின் மத்தியில் அழகான குளம் ஒன்று இருந்தது. குளக்கரையில் இருந்த புதர்களில் ஒரு வாத்து முட்டைகளை இட்டு அடைக்காத்துக் கொண்டிருந்தது. மற்றைய வாத்துகள் பொய்கையில் அங்குமிங்குமாக நீந்திக் கொண்டிருந்தன. அந்த வாத்திற்கு மற்றைய வாத்துக்களுடன் விளையாடுவதற்கு விருப்பமில்லை. இருந்தாலும் அந்த வாத்து காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும் என நினைத்து நீந்துவதற்காக பொய்கையை நோக்கி ஓடியது.

1. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பறவை எது?

.....

2. குளம் என்பதன் ஒத்த பதம் யாது?

.....

3. வாத்து முட்டையிட்டு அடைக்காத்த இடம் யாது?

.....

4. இப்பந்தியிலுள்ள இணைமொழி யாது?

.....

5. இப்பந்தியில் கூறப்பட்டுள்ள பழமொழி யாது?

.....

6. இப்பந்தியில் கூறப்பட்டுள்ள அ.்றிணை பன்மை பலவின்பால் சொல் எது?

.....

www.lkedu.lk

7. வடிவான என்ற சொல்லின் ஒத்த கருத்துச் சொல் யாது?

.....

8. வாயக்கால்களில் என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக ?

.....

9. பந்தியில் வந்துள்ள அடைமொழிச் சொல் ஒன்று எழுதுக ?

.....

10..இறந்த கால பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக ?

.....

(14) கீழ்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

1968 ஆம் ஆண்டில் இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் எல்லே விளையாட்டும் ஒரு நிகழ்ச்சியாக சேர்த்துக்கொள்ளப்பட்டது. 1976 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்விளையாட்டு ஆண்களுக்கு மட்டுமன்றி பெண்களுக்குரிய நிகழ்ச்சியாகவும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. தம்பி இவ்விளையாட்டு இன்று நகர்புறங்களைக் காட்டிலும் கிராமப் புறங்களிலேயே வளர்ச்சி பெறுகின்றது.

1. பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் எல்லே விளையாட்டு எத்தனையாம் ஆண்டு சேர்த்துக்கொள்ளப்பட்டது?

.....

2. சேர்த்துக்கொள்ளப்பட்டது என்பதை பிர்த்தெழுதுக.

.....

3. முடிவு என்பதன் எதிர் சொல் யாது?

.....

www.ksou.lk

(15) கீழ்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

சிறிது நேரத்திற்க்கு பிறகு அவை இரண்டும் ஒரு குளத்தின் அருகே வந்தன் .அங்கே ஒரு நாரை நீரில் நீந்திக்கொண்டிருப்பதைப் பார்த்தன.அந்த நாரையின் அலகு பெரியதாகவும் கூர்மையாகவும் இருந்தது நாரையின் தொண்டைப் பகுதியில் பை போல ஓர் அமைப்பு இருந்தது. அந்த நாரையைப் பார்த்த சின்னக் கிளி மிகவும் வியப்படைந்தது.

ஆந்த நாரை நீரில் முன்னும் பின்னுமாக நீந்திக் கொண்டு இருந்தது.சிறிய மீன்களைப் பார்த்தவுடன்.கரண்டி போன்ற தன் அலகால் அவற்றை அள்ளியது. தண்ணீர் வடிந்த பின் அகப்பட்ட அந்தச் சிறிய மீன்களை விழுங்கியது.

1. இப் பந்தியில் எதைப் பற்றி கூறப்படுகின்றது ?

   .....

2. இப்பந்தியில் வந்துள்ள உவமைத் தொடர்கள் இரண்டைக் குறிப்பிடுக ?

   .....

3. இப்பந்தியில் வந்துள்ள இணைமொழிச் சொல் ஒன்று குறிப்பிடுக ?

   .....

4. இப்பந்தியில் வந்துள்ள அடைமொழிச் சொல் ஒன்று குறிப்பிடுக ?

   .....

5. இப்பந்தியில் வந்துள்ள சினைப் பெயர்ச் சொற்கள் இரண்டு எழுதுக?

   .....

www.lkedu.lk